திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த இயங்கும் நூலகங்களுக்கு அதிகமாக உதவி செய்து வந்தால், அவை நல்லமுறையில் இயங்கி வரும். இப்படிச் செயலற்று முடங்கிக் கிடக்கும் இயங்கு நூலகங்களை அதனால் பழுது பார்க்கப் பட்டு, இப்போதுள்ள குறைகள் போக்கப்படும். அதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இயங்கு நூலகங்கள் இயங்காமல் இருப்பதற்கு நிதிப் பற்றுக்குறைதான் காரணம் என்று சொல்லப்படுகிறது. போதிய நிதி வசதி ஏற்பட்டால் இந்தக் குறைகள் போக்கப்பட்டு விடும். நிதி வசதியைப் பெருக்குவதற்காக இப்போது வசூலிக்கப்பட்டு வருகின்ற மூன்று காசு செஸ் நிதியை ஐந்து காசாக உயர்த்தியுள்ளார்கள். நிதி வசதி பெருகியவுடன் குறைகள் தவிர்க்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிய உணவுத் திட்டம்

*164. வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில், மதிய உணவுத் திட்டம் யாருடைய மேற்பார்வையில் தற்போது நடைபெறுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மதிய உணவு வழங்கு திட்டத்தில் உள்ள ஒரு மைய நிலையத்தின் நிருவாகம், உள்ளூர் நன்கொடையாளர்களால் அமைக்கப்படும் 'பொதுக் குழு', 'நிருவாகக் குழு' என்ற இரு குழுக்களினால் நடத்தப்படுகிறது. அந்நிருவாகம் கல்வித் துறை அலுவலர்களின் மேற்பார்வைக்கு உட்பட்டது.

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : தலைவரவர்களே, மதிய உணவுத் திட்டத்திற்காக ஊராட்சி மன்றங்கள் இரண்டு காசு வீதம் கொடுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. நடைமுறையில், எந்த ஊராட்சியைச் சேர்ந்த குழந்தைகள் படிக்கிறார்களோ, அந்த ஊராட்சியே அந்த இரண்டு காசு வீதத்தை—அந்தப் பங்குத் தொகையை கொடுக்கவேண்டுமென்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இத்திட்டத்திற்காக ஊராட்சி மன்றங்கள் 2 காசு, பொதுமக்கள் 2 காசு, அரசாங்கம் 6 காசு என்ற வீதத்தில் செலவு செய்யப்படுகிறது. எந்த எல்லையில் அந்தப் பள்ளி இருக்கிறதோ அந்தப் பகுதி மக்களும், ஊராட்சிகளும் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஊராட்சித் தலைவர்கள் ஆங்காங்குள்ள பொதுக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள். பொதுக் குழுவும், நிர்வாகக் குழுவும் கல்வித் துறை அலுவலர்களின் மேற்பார்வையில் இத்திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்தி வருகின்றன.

திரு. சோ. அழகர்சாமி : இப்போது இந்த மதிய உணவுத் திட்டம் செயல்பட அரசாங்கம் 6 காசு, பொதுமக்கள் 2 காசு, ஊராட்சி மன்றங்கள் 2 காசு என்ற வீதத்தில் கொடுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் பல இடங்களில் பொதுமக்களிடம் இருந்து 2 காசு வீதம் வாங்கமுடியாத நிலை இருக்கிறது. அப்படி இருந்தாலும் ஊராட்சி மன்றங்கள் வாங்கியதாகக் கணக்கு காட்டுகிறார்கள். ஆகவே அதற்கு மாறாக அரசாங்கம் 8 காசு, ஊராட்சிகள்

2 காசு என்ற நியதியை ஏற்படுத்தினால் நல்லது. அல்லது அரசாங்கம் 6 காசு, ஊராட்சிகள் 2 காசு என்று இருந்தால் போதும். கணக்கு எழுதப்படுவதிலே ஏற்படுகின்ற தவறுகளை நீக்குவதற்கு இந்த முயற்சியில் ஈடுபடுமோ என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இத்திட்டத்திற்கு அரசாங்கம் 6 காசு, பொதுமக்கள் 2 காசு, ஊராட்சிகள் 2 காசு கொடுத்து வருகிறார்கள். இதை வைத்து மட்டும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. இத்திட்டத்திற்கு 'கேர்' நிறுவனம் ஓரளவு உணவுப் பொருளை கொடுத்துவருவதால், இத்திட்டத்தைச் சமாளித்து வருகிறோம். பொதுக்காரியங்களில் பொதுமக்களுடைய ஒத்துழைப்பும் இருக்கவேண்டும் என்பதற்காகவே, அவர்களிடம் இருந்து 2 காசு வசூலிக்கப்படுகிறது. மக்களுக்கும் அது தெரியவேண்டும் என்பதற்காகவே இந்த முறையை ஏற்படுத்தியிருக்கிறோம். கணக்கு எழுதுவதில் தவறுகள் ஏற்பட்டால் அதை அனுமதிக்க முடியாது. அது தடுக்கப்பட வேண்டியதுதான். மீண்டும் இத்திட்டத்தைப் பரிசிலனை செய்யும்போது, ஊராட்சிகளோடு கலந்து, இதற்கு ஒரு முடிவு எடுக்கலாம்.

திரு. நா. வெ. குருசாமி : ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகிற பள்ளிகளில் மதிய உணவு திட்டம் நல்லமுறையில் நடத்தப்படவில்லை என்கிற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இன்றைய தினம் 30,668 பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பெரும்பாலான இடங்களில் இந்தத் திட்டம் சீராகவும், சிறப்பாகவும்தான் நடைபெறுகின்றன. இதில் அக்கறையோடு பணியாற்றுகிறவர்கள் இந்தத் திட்டத்திற்காக நிலங்கள் கூட நன்கொடை அளித்து—உணவுக்கு நிரந்தர வசதிவாய்ப்பு அளித்திருக்கிறார்கள். பலயிடங்களில் ஆசிரியர்களும் மிகுந்த ஆர்வம் காட்டிவருகிறார்கள். இவ்வளவு பெரிய திட்டத்தில் அங்கங்கே ஒன்றிரண்டு இடங்களில் குறைபாடுகள் இருக்கவும் கூடும். அவற்றை அங்கங்கே உள்ள கல்வி அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அவற்றை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

*165. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதிய உணவுத் திட்டத்திற்கு 'கேர்' ஸ்தாபனம் மூலம் கிடைக்கும் உதவிகள் என்ன?

(இ) பொது சமையல் கூடங்கள் (central kitchens) தமிழ் நாட்டில் தற்போது எத்தனை அமைக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மதிய உணவுத் திட்டத்திற்கு பல்கார் கோதுமை, சி.எஸ்.எம். சத்துணவு, சாலெட் எண்ணை முதலிய உணவுப் பொருட்கள் 'கேர்' நிறுவனத்தாரால் வழங்கப்படுகின்றன.

சுகாதார முறைப்படி உணவு தயாரிக்க ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு மத்திய சமையற்கூடம் கட்ட 'கேர்' நிறுவனம் முன் வந்துள்ளது. சமைக்கப்பட்ட உணவு ஒவ்வொரு பள்ளிகளுக்கும் எடுத்துச் செல்ல ஊர்திகளையும் நன்கொடையாக அளித்துள்ளது.